

குழந்தைக் கவிஞர்

# அழ.வள்ளியப்பா

“அதோ அந்தச் செடிதான். எப்படி இருக்கிறது. பார்த்தாயா!” என்று கேட்டாள் கமலா.

“ஆஹா! அந்தச் செடி எவ்வளவு அழகாயிருக்கிறது! எத்தனை பூக்கள்! அது எனக்குக் கிடைத்தால் நிச்சயம் பரிசு எனக்குத்தான்” என்றாள் மீரா.



உடனே வேலிக் கதவைத் திறந்தாள், கமலா.

“யாரது ?” என்று கேட்டுக்கொண்டே பார்வதியின் அம்மா குடிசையிலிருந்து வெளியே வந்தாள்.

“ஏனம்மா, நாங்கள் தான். பார்வதி இல்லையா ?” என்று கேட்டாள் கமலா.

“கடைவீதிக்கு மண்ணெண்ணெய் வாங்கப் போயிருக்கிறாள். என்ன விஷயம் ?” என்று கேட்டாள், அந்த அம்மா.

“ஒன்றுமில்லை. இவள் யார் தெரியுமா ? மிராசுதார் முருகேசபிள்ளை மகள் இவள்தான். பெயர் மீரா” என்று மீராவை அறிமுகப்படுத்தி வைத்தாள் கமலா.

“அடடே, அப்படியா!.....ஆமாம், பார்வதியை எதற்காகத் தேடி வந்தீர்கள் ?” என்று கேட்டாள் அந்த அம்மாள்.

